# TT STUDY MATERIAL

# பொதுத்தமிழ்

# மாதிரி வினாத்தாள்

தொகுதி-2

**TNPSC GROUP II, IIA, IV, VAO**

**தேர்வு எழுதுவோருக்கு பயன்படும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது**



**புதிய பாடத்திட்டத்தின்படி தயாரிக்கப்பட்டது**

# TNPSC GR-2, GR-4, VAO பொதுத்தமிழ் மாதிரித்தேர்வு

1. வணங்கி வழியொழுகி மாண்டார்சொல் கொண்டு நுணங்கிநூல் நோக்கி....–இதில் மாண்டார்சொல் என்பதன் பொருள் யாது?
   (A) சான்றோர் அறிவுரை
   (B) பழமொழி
   (C) இறந்தவர் சொல்
   (D) பொறாமையில் கூறும் சொல்

2. கற்றறிந்தார் ஏத்தும் கலியோ(டு), அகம், புறம், என்(று) .................. எட்டுத்தொகை
   (A) இத்தனையும் (B) இத்திறந்த
   (C) இத்திறத்த (D) இவையாவும்

3. கீழ்காணும் வாக்கியங்களில் முறையாக அமைந்துள்ள வாக்கியத்தை தேர்வு செய்க.
   (A) தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்துஎன் ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.
   (B பால்கலந்து தேன்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்துஎன் உயிர்கலந்து ஊன்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.
   (C) உயிர்கலந்து பால்கலந்து தேன்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்துஎன் ஊன்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.
   (D) தேன்கலந்து பால்கலந்து ஊன்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்துஎன் உவட்டாமல் உயிர்கலந்து இனிப்பதுவே.

4. கன்னியர் எழுவருள் இளையவள் யார்?
   (A) பிடாரி (B) துர்க்கை
   (C) கொற்றவை (D) காளி

5. "கணவனை இழந்த மகளிர்க்கு, எவ்விதத்திலும் ஆறுதல் கூற இயலாது" எனக் கூறியவர்?
   (A) ஔவையார் (B) கோப்பெருஞ்சோழன்
   (C) கோப்பெருந்தேவி (D) தீவதிலகை

6. இலக்கணக் குறிப்பு தருக
   ஏகாச் சிறப்பின், நின்னகர். படர்ந்த தெண்டிரை
   (A) பெயரெச்சம், ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், ஆறாம் வேற்றுமைத் தொகை.
   (B) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், ஆறாம் வேற்றுமைத் தொகை, பெயரெச்சம்
   (C) பெயரெச்சம், ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், வினைத் தொகை
   (D) வினைத் தொகை ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், ஆறாம் வேற்றுமைத் தொகை.

7. அரிகால் மாறிய அங்கண் அகல்வாயல் மறுகால் உழுத ஈரச் செறுவின் அடிக்கோடிட்ட சொற்களின் பொருள் முறையே
   (A) இறைவன், வயல் (B) நெற்கதிர், வயல்
   (C) நெற்கதிர், பகை (D) அறுத்தல், பகை

8. கீழ்கண்ட சொற்களுக்கு இலக்கணக்குறிப்பு கண்டறிக.
   செய்வினை, சென்றவட்டி, மென்கண், ஊர
   (A) வினைத்தொகை, பெயரெச்சம்,
   (B) வினைத்தொகை, பெயரெச்சம், பண்புத்தொகை, விளித்தொடர்
   (C) பண்புத்தொகை, பெயரெச்சம் விளித்தொடர், வினைத் தொகை
   (D) பெயரெச்சம், வினைத் தொகை, பண்புத்தொகை விளித்தொடர்

9. சான்றோர் பாலர் ஆப சாலார் சாலார் பாலர் ஆகுபவே எனப் பாடியவர் யார்?
   (A) மிளைகிழான் நல்வேட்டனார்
   (B) கண்ணகனார்
   (C) நக்கீரர்
   (D) ஔவையார்

10. பொருந்தா இணையைக் கண்டறிக.
    (A) மேதி – சிறப்பு (B) நயனம் – கண்கள்
    (C) நுதல் – நெற்றி (D) தொடை – மாலை

11. தவறான கூற்றைக் கண்டறிக.
    (A) கம்பராமாயணம் ஆறு காண்டங்கள் கொண்டது.
    (B) குகப்படலத்தை கங்கைப்படலம் எனவும் கூறுவர்
    (C) கம்பராமாயணத்தில் அயோத்தியா காண்டம் மூன்றாம் காண்டமாகும்
    (D) கம்பர் தாம் இயற்றிய நூலுக்கு இராமாவதாரம் என பெயரிட்டார்.

12. குகனின் பறை எது?
    (A) தொண்டகம் (B) ஏறுகோட்பறை
    (C) துடி (D) மணமுழா

13. நிற்றி ஈண்டு என்றுபுக்கு நெடியவன் தொழுது தம்பி கொற்றவ நின்னைக் காணக் குறுகினன் – இங்கு குறுகினன் யார்?
    (A) இராமன் (B) இலக்குவன்
    (C) தசரதன் (D) குகன்

14. குறுகினன் என்னும் நிகழ்கால வினைமுற்றின் வேர்ச்சொல் யாது?
    (A) குறு (B) குறுகி
    (C) குறுக்கு (D) குறுகு

# TNPSC GR-2, GR-4, VAO பொதுத்தமிழ் மாதிரித்தேர்வு

15. அண்ணலும் விரும்பி என்பால் அழைத்திநீ அவனை என்றான் பண்ணவன் வருக என்னப் பரிவினன் – இதில் பண்ணவன் எனக்குறிப்பிடப்படுபவர் யார்?
(A) இலக்குவன் (B) இராமன்
(C) குகன் (D) தசரதன்

16. தவறாக பொருந்தியுள்ள இலக்கணக் குறிப்புகளை/குறிப்பை கண்டறிக.
i) அழைத்தி – முன்னிலை பன்மை வினைமுற்று
ii) கார்குலாம் – ஆறாம் வேற்றுமைத் தொகை
iii) உணர்த்துவான் – வினையாலணையும் பெயர்
iv) நிதிதருகவிகை – இரண்டாம் வேற்றுமைத் தொகை
(A) i மட்டும் (B) iii, iv
(C) iv மட்டும் (D) i, iv

17. கொணர்ந்தேன் – இச்சொல்லின் வேர்ச்சொல் காண்க.
(A) கொணர் (B) கொடு
(C) கொண்டு (D) கொண்

18. உண்டனெம் – என்னும் சொல்லுக்கு இணையானச் சொல் எது?
(A) உண்கிறோம் (B) உண்டோம்
(C) உண்ணுவது போல (D) உண்போம்

19. பொருள்முதல் ஆறனையும் அடிப்படையாகக் கொண்டு, முன் சொல்லப்பட்ட செய்பவன் முதலான ஆறனுள் கருத்தா ஒன்றனை மட்டும் தெரிவித்துக் காலத்தைக் காட்டுவது எது?
(A) குறிப்பு வினைமுற்று
(B) தெரிநிலை வினைமுற்று
(C) தெரிநிலை பெயரெச்சம்
(D) குறிப்பு பெயரெச்சம்.

20. இணையடி தொழுது வீழ்ந்தனனே மடமொழி – இவ்வரியில் மடமொழி எனக் குறிப்பிடப் படுபவள்
(A) கண்ணகி (B) மாதவி
(C) கோப்பெருந்தேவி (D) மாதரி

21. தவறான கூற்றை கண்டறிக.
(A) வினைமுற்றை முற்றுவினை எனவும் கூறுவர்
(B) வினைமுற்று மூன்று வகைப்படும்
(C) முற்று பெற்று வந்துள்ள வினைச் சொற்களை வினைமுற்று என்பர்
(D) காலத்தை வெளிப்படையாகக் காட்டுவது தெரிநிலை வினைமுற்று.

22. "தாமே பாடுபட்டு உழைத்து முன்னேற வேண்டும் என்னும் உயர்ந்த எண்ணம், நம் இளைஞர்களிடையே வளர வேண்டும்" எனக் கூறியவர்
(A) பெரியார் (B) விவேகானந்தர்
(C) மு. வரதராசனார் (D) அண்ணா

23. சங்க இலக்கியங்களின் மொத்த அடிகள்
(A) 23,650 (B) 25,650
(C) 26,350 (D) 20,530

24. தவறானதைக் கண்டறிக
(A) கல் + தீது = கஃறீது
(B) என்பதி – நான்காம் வேற்றுமைத் தொகை
(C) கடலை – ஐகாரக் குறுக்கம்
(D) தேவா – விளி

25. வித்தொடு சென்ற வட்டி பற்பல மீனோடு பெயரும் யாணர் ஊர... – இதில் வட்டி என்பதன் பொருள்?
(A) புது வருவாய் (B) வயல்
(C) பனையோலைப்பெட்டி (D) விதை

26. கண்ணகனார் யாருடைய அவைக்களப்புலவராக இருந்தார்?
(A) குலோத்துங்கச் சோழன்
(B) பன்னாடு தந்த மாறன் வழுதி
(C) அரிமர்த்தனப் பாண்டியன்
(D) கோப்பெருஞ்சோழன்

27. பேச்சை தொடங்குவது
(A) முடிப்பு (B) தொடுப்பு
(C) கடுப்பு (D) எடுப்பு

28. கீழ்கண்ட வாக்கியங்களை கவனி.
கூற்று A: வந்த பையன்–இத்தொடரில் வந்த என்பது பையன் என்னும் பெயரைக் கொண்டு முடிவதால், பெயரெச்சம் எனப்படும்.
விளக்கம் R : தெரிநிலைப் பெயரெச்சத்தில் முக்காலத்தையும் செயலையும் வெளிப்படையாகக் காட்டிச் செய்பவன் முதலான ஆறும் எஞ்சி நிற்கும்.
(a) A சரி ஆனால் R தவறு
(b) A தவறு ஆனால் R சரி
(C) A மற்றும் R சரி
(d) A மற்றும் R தவறு

29. Writ - என்பதன் தமிழாக்கம்
(A) சரி (B) எழுது
(C) சட்ட ஆவணம் (D) தவறு

30. ஆயக்கலைகள்................என்பர்
(A) 64 (B) 62 (C) 60 (D) 54

www.tnpsctamil.in TT STUDY MATERIALS

# TNPSC GR-2, GR-4, VAO பொதுத்தமிழ் மாதிரித்தேர்வு

31. மேடைப்பேச்சுக்கு உயிர்நாடி எது?
(A) கருத்துகள் (B) பொன்மொழிகள்
(C) மேற்கோள்கள் (D) நகைச்சுவை

32. கீழ்கண்ட கூற்றுகளுள் தவறான கூற்றைக் கண்டறிக.
i) தொடக்ககவுரைக்கு பிறகு, பொருளை விரித்துப் பேசும்முறை தொடுத்தல் எனப்படும்.
ii) இலக்கியக் கூறுகள் என்பவை மருந்தின் மேலிட்ட இனிப்புப் போன்றவை
iii) சொல்லக் கருதும் செய்தியை நிரல்படச் சொல்லுதல் வேண்டும்
iv) உணர்ச்சி உள்ள பேச்சே உயிருள்ள பேச்சாகும்.
(A) i, iii (B) i , ii, iii
(C) ii மட்டும் (D) அனைத்தும் சரி

33. அறிஞர் அண்ணா எவ்விதழ் மூலம் கருத்து விருந்து அளித்தார்?
(A) உதயசூரியன் (B) காஞ்சி
(C) முரசொலி (D) தேசபக்தன்

34. உழைத்துப் பெறு ! உரியநேரத்தில் பெறு! முயற்சி செய்து பெறு! என யார் அன்பு ஆணையிடுவதாக அறிஞர் அண்ணா கூறுகிறார்?
(A) தமிழ்த்தாய் (B) நிலமடந்தை
(C) பாரதத்தாய் (D) தமிழர்கள்

35. அங்கு கிடப்பது பாம்போ? கயிறோ? என்பது
(A) அறியாவினா (B) கொளல் வினா
(C) அறிவினா (D) ஐயவினா

36. “இது செய்வாயா?” என்று வினவிய போது, “நீயே செய்” என்று கூறுவது?
(A) மறை விடை (B) ஏவல் விடை
(C) வினா எதிர் வினாதல் விடை
(D) சுட்டு விடை

37. பொருந்தா ஒன்றைக் கண்டறிக
(A) உயர்ந்தோங்கி (B) மீமிசை ஞாயிறு
(C) நடுமையம் (D) நண்பகல்

38. உவமையால் விளங்கும் பொருளைக் கண்டறிக. ‘இலவுகாத்த கிளிபோல’
(A) பயனற்ற செயல் (B) காத்திருத்தல்
(C) வீண் முயற்சி (D) ஏமாற்றம்

39. தவறான இணையைக் கண்டறிக
(A) தாள் – முயற்சி (B) மிசை– கீழே
(C) செய் – வீடு (D) ஈறு – எல்லை

40. “இனிதினிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம் இலகுவது புலவர் தரு சுவடிச் சாலை” என நூலகத்தின் பெருமையைப் பாடியவர் யார்?
(A) பாரதியார் (B) பாரதிதாசன்
(C) பெருஞ்சித்திரனார் (D) நாமக்கல் கவிஞர்

41. தையல் துயர்க்குத் தரியாது தம்சிறகாம் கையால் வயிறலைத்துக் காரிருள்வாய் வெய்யோனை வாவுபரித் தேரேறி வாவென் றழைப்பனபோல் கூவினவே கோழிக் குலம் – இப்பாடலில் இடம் பெற்றுள்ள அணி யாது?
(A) வஞ்சப்புகழ்ச்சி
(B) தற்குறிப்பேற்ற அணி
(C) பின்வரு நிலையணி
(D) பிறிது மொழிதலணி

42. பொருத்துக
a) கன்னிமாரா நூலகம் – 1) 1958
b) அண்ணாமலைப் பல்கலைக் கழக நூலகம் – 2) 1869
c) மறைமலை அடிகளார் நூலகம் – 3) 1966
d) மதுரை காமராசர் பல்கலைக் கழக நூலகம் – 4) 1929

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 2 | 1 | 3 | 4 |

43. இந்தியாவில் உள்ள நூலகங்களில் முதன்மையான நூலகம் உள்ள இடம்
(A) சென்னை (B) மும்பை
(C) கல்கத்தா (D) டெல்லி

44. கி.மு. 2000 ஆண்டிற்கு முந்தைய சுமார் 2500 களிமண் பலகைகள் கண்டு பிடிக்கப்பட்ட இடம் எது?
(A) பாபிலோனியாவில் உள்ள நிப்பூர்
(B) பாபிலோனியாவில் உள்ள திஸ்பூர்
(C) பாபிலோனியாவில் உள்ள ரங்பூர்
(D) பாபிலோனியாவில் உள்ள டோலாபூர்

45. ஓலைச்சுவடி அரிக்காமல் இருப்பதற்கு பயன்படுத்திய பொருள் அல்லாதது எது?
(A) துளசி (B) கறிவேப்பிலை
(C) வேப்பிலை (D) மஞ்சள்

46. “சாதனை பூக்களை ஏந்து முன்னே இங்கு நல்லசெடி இளைப் பாறிடுமோ?” எனப்பாடியவர்?
(A) சாலை இளந்திரையன் (B) தாராபாரதி
(C) வாணிதாசன் (D) முடியரசன்

47. மரபு பிழையற்ற வாக்கியத்தை கண்டறிக

TT STUDY MATERIAL www.tnpsctamil.in

(A) அம்பு எய்து பூப்பறித்து மரம் வெட்டி மாத்திரை விழுங்கி கூடை முடைந்தான்
(B) அம்பு தொடுத்து பூப்பறித்து மரம் சாய்த்து மாத்திரை சாப்பிட்டு கூடை முடைந்தான்
(C) அம்பு எய்து பூப்பறித்து மரம் சாய்த்து மாத்திரை சாப்பிட்டு கூடை முடைந்தான்.
(D) அம்பு தொடுத்து பூப்பறித்து மரம் வெட்டி மாத்திரை தின்று கூடை முடைந்தான்.

48. ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று, முதலடியும் கடைசியடியும் நாற்சீர் அடிகளாகவும், இடையில் உள்ள அடிகள் குறளடிகளாயும், சிந்தடிகளாயும் வருவது
(A) இணைக்குறள் ஆசிரியப்பா
(B) நிலை மண்டில ஆசிரியப்பா
(C) அடிமறி மண்டில ஆசிரியப்பா
(D) நேரிசை ஆசிரியப்பா

49. ஒரு பைசாத் தமிழன் என்ற இதழ் எங்கிருந்து வெளியிடப்பட்டது?
(A) சைதாப்பேட்டை (B) குரோம்பேட்டை
(C) ஆயிரம் விளக்கு (D) இராயப்பேட்டை

50. கீழ்கண்ட கூற்றை கவனி
கூற்று A: ஒரு பைசாத் தமிழன் இதழை அயோத்திதாச பண்டிதர் வெளியிட்டார்.
விளக்கம் R: மக்களுக்கு நீதி, சரியான பாதை, நேர்மை ஆசியவற்றை செய்திகளாக்கினார்.
(A) A சரி, R தவறு (B) A & R தவறு
(C) A & R சரி (D) A தவறு, R சரி

51. கீழ்கண்ட அறிவுரைகளில் வள்ளலார் கூறாதது எது?
(A) தந்தை தாய் மொழியைத் தள்ளி நடக்காதே
(B) கடிந்து பேசி மனத்தை கருக்காதே
(C) வெயிலுக்கு ஒதுங்கும் விருட்சம் அழிக்காதே
(D) இரப்போர்க்குப் பிச்சை இல்லை என்னாதே

52. கந்தகோட்டத்து இறைவனை இராமலிங்கர் மனமுருகப் பாடிய பாடல்களின் தொகுப்பு
(A) தெய்வமணிமாலை
(B) வடிவுடை மாணிக்கமாலை
(C) கந்தர் கோட்ட இறைமாலை
(D) எழுத்தறியும் பெருமான்மாலை

53. குலசேகர ஆழ்வார் பிறந்த ஊர்?
(A) திருவண்ணாமலை (B) திருவாரூர்
(C) திருவஞ்சைக்களம் (D) திருவெண்காடு

54. திருவரங்கத்தில் குலசேகர ஆழ்வார் கட்டிய மதில்
(A) முதல் மதில் (B) இரண்டாம் மதில்
(C) மூன்றாம் மதில் (D) நான்காம் மதில்

55. கலம்பக நூல்களில் முதல் நூல் எது?
(A) நந்திக் கலம்பகம் (B) காசிக் கலம்பகம்
(C) மதுரைக் கலம்பகம் (D) திருக்கலம்பகம்

56. கலித்தொகையின் மொத்த பாடல்களின் எண்ணிக்கை
(A) 160 (B) 151 (C) 161 (D) 150

57. “பாரதநாடு பார்க்கெலாம் திலகம்” எனப் பாடியவர் யார்?
(A) பாரதிதாசன் (B) முடியரசன்
(C) பாரதியார் (D) வாணிதாசன்

58. பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.
(A) வஞ்சி – மண்ணாசை கொண்டு போரிடல்
(B) உழிஞை – தம் மதிலைக் காத்தல்
(C) தும்பை – வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு போரிடுதல்
(D) காஞ்சி – நாட்டை கைப்பற்ற வந்த மாற்றரசனோடு போரிடல்

59. ஒரு தலைக் காமம் என்பது
(A) கைக்கிளைத் திணை (B) பெருந்திணை
(C) பொதுவியல் திணை (D) பாடாண் திணை

60. சீறாப்புராணம் எவ்வகைப் பாக்களால் ஆனது?
(A) கலிப்பா (B) வெண்பா
(C) விருத்தப்பா (D) ஆசிரியப்பா

61. பொருத்துக
(a) குறிஞ்சி – ஏறுகோட்பறை
(b) முல்லை – துடி
(c) மருதம் – தொண்டகம்
(d) பாலை – மணமுழா

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 1 | 4 | 3 | 2 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

62. எள்செடியின் விதையிலிருந்து நெய் கண்டுபிடித்த திருநாளே தீபாவளி என்று கூறியவர் யார்?
(A) ஆனந்தரங்கர் (B) வள்ளலார்
(C) திரு.வி.க. (D) அயோத்திதாச பண்டிதர்

63. “மீன்நோக்கும் நீள்வயல் சூழ் வித்துவக் கோட்டம்மா என் பானோக்காயாகிலுமுன் பற்றல்லால் பற்றில்லேன்” எனப் பாடியவர் யார்?

TT STUDY MATERIAL www.tnpsctamil.in

(A) இராமலிங்கர் (B) திருமூலர்
(C) குலசேகர ஆழ்வார் (D) மதுரகவி ஆழ்வார்

64. கலம்பக உறுப்புகள் அல்லாத தவறான வரிசையை கண்டறிக.
(A) புயவகுப்பு, அம்மானை, கார், ஊசல்,
(B) இரங்கல், மறம், தழை, தவம், குறம்
(C) சித்து, பாண், கைக்கிளை, தூது
(D) வண்டு, கலி, சம்பிரதம், மாதங்கி, காலம்

65. நெய்தற்கலியைப் பாடியவர்?
(A) நல்லந்துவனார் (B) அம்மூவனார்
(C) பேயனார் (D) ஓதலாந்தையார்

66. சீறாப்புராணம் எத்தனை பாக்களைக் கொண்டது?
(A) 5027 (B) 5001 (C) 5022 (D) 5071

67. சித்திரை, வைகாசி ஆகிய இரண்டும்................ காலத்திற்குரியன.
(A) முன்பனி (B) பின்பனி
(C) இளவேனில் (D) முதுவேனில்

68. கீழ்கண்ட கூற்றை கவனி.
கூற்று A: ஏற்பாடு என்பது பிற்பகல் 2 மணி முதல் 6 மணிவரை
விளக்கம் R: எற்பாடு = எல் + பாடு இதில் எல் என்பதன் பொருள் ஞாயிறு பாடு என்பதன் பொருள் மறையும் நேரம்.
(A) A சரி, R தவறு (B) A & R தவறு
(C) A & R சரி (D) A தவறு R சரி

69. அகத்திணை எத்தனை வகைப்படும்?
(A) 12 (B) 7 (C) 6 (D) 10

70. பொருத்துக.
(a) குறிச்சி – மாலை
(b) முல்லை – வைகறை
(c) மருதம் – ஏற்பாடு
(d) நெய்தல் – யாமம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 1 | 3 | 2 | 4 |
| (D) | 3 | 2 | 4 | 1 |

71. மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து ஈனமில் கிருமி செருவினில் பிழைத்தும் எனக் கூறும் நூல் எது?
(A) திருமந்திரம் (B) திருவாசகம்
(C) புறநானூறு (D) குறுந்தொகை

72. "பயவாக் களரனையர் கல்லாதவர்" எனக் கூறுபவர்?
(A) கம்பர் (B) திருவள்ளுவர்
(C) ஔவையார் (D) திருமூலர்

73. மழையை அமிழ்தம் என்றவர் யார்?
(A) ஔவையார் (B) திருவள்ளுவர்
(C) கம்பர் (D) திருமூலர்

74. உறுபொருளும் உல்கு பொருளுந்தன் ஒன்னார்த் தெறுபொருளும் வேந்தன் பொருள் இக்குறளில் இடம்பெற்றிருப்பது
(A) இணை எதுகை, அடி மோனை
(B) இணை மோனை, அடி எதுகை
(C) இணை எதுகை, அடி எதுகை
(D) இணை எதுகை, இணை மோனை

75. தவறாக பொருந்தியுள்ள இலக்கணக் குறிப்பைக் கண்டறிக
(A) குன்றேறி – 2ம் வேற்றுமைத்தொகை
(B) ஒண் பொருள் – பண்புத்தொகை
(C) தன்ஒன்னார் – 6ம் வேற்றுமைத் தொகை
(D) இல்லை – குறிப்பு வினைமுற்று

76. பொருள் தருக. – பத்தடுத்த
(A) 11 (B) பத்து மடங்கு
(C) பத்துக்கு அடுத்த எண்கள்
(D) பத்துக்கு குறைவான எண்கள்

77. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பார் இலானுங் கெடும்– இதில் ஏமரா என்பதன் பொருள்
(A) ஏமாற்றம் (B) பாதுகாவல் இல்லாத
(C) ஏமாற்றமில்லா (D) பாதுகாப்பான

78. பெருவெடிப்புக் கொள்கையின்படி இப்பேரண்டம் விரிவடைந்து நிற்பதைக் கூறும் தமிழ் நூல் எது?
(A) திருவாசகம் (B) திருக்குறள்
(C) சிலப்பதிகாரம் (D) பதிற்றுப்பத்து

79. பொருந்தா ஒன்றைக் கண்டறிக.
(A) தருமசேனர் (B) மருணீக்கியார்
(C) அப்பர் (D) வாகீசர்

80. தவறான கூற்றைக் கண்டறிக.
(A) விளித் தொடரில் வல்லினம் மிகாது
(B) நான்காம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.
(C) உம்மைத் தொகையில் வல்லினம் மிகும்
(D) வன்றொடர்க் குற்றியலுகரத்தின்பின் வல்லினம் மிகும்

81. ஒருமைத் தோற்றத்து ஐவேறு வனப்பின் இலங்குகதிர் விடூஉம் நலங்கெழு மணிகளும்.... இவ்வடிகள் இடம்பெறும் நூல் எது?
(A) மணிமேகலை (B) சிலப்பதிகாரம்
(C) திருவாசகம் (D) பெருங்கதை

TT STUDY MATERIALS www.tnpsctamil.in

# TNPSC GR-2, GR-4, VAO பொதுத்தமிழ் மாதிரித்தேர்வு

82. "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்; நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்" என்று பாடியவர் யார்?
(A) மாணிக்கவாசகர் (B) திருநாவுக்கரசர்
(C) பாரதியார் (D) திருஞானசம்மந்தர்

83. சிற்றோடை – என்னும் சொல் கீழ்க்கண்ட எந்தவிதிப்படி புணரவில்லை?
(A) ஈறுபோதல் (B) தன்னொற்று இரட்டல்
(C) இனமிகல் (D) உயிர்வரின் உக்குரல் மெய்விட்டு ஓடும்

84. நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும் காலின் வந்த கருங்கறி மூடையும் இவ்வரிகள் இடம்பெறும் நூல் எது?
(A) பட்டினப்பாலை (B) சிலப்பதிகாரம்
(C) மதுரைக்காஞ்சி (D) புறநானூறு

85. பிரித்து எழுதுக. உன்னோடு வந்துரைக்கும்
(A) உன்னோடு + வந்து + உரைக்கும்
(B) உன்னோடு + உவந்து + உரைக்கும்
(C) உன்னோடு + வந்துரைக்கும்
(D) உன் + ஒடு + வந்து + உரைக்கும்

86. திங்களூர் எந்த மாவட்டத்தில் உள்ளது?
(A) பெரம்பலூர் (B) காஞ்சிபுரம்
(C) கடலூர் (D) தஞ்சாவூர்

87. தொண்டர்சீர் பரவுவார் என்று போற்றப்படுபவர் யார்?
(A) மாணிக்கவாசகர் (B) சேக்கிழார்
(C) திருநாவுக்கரசர் (D) சுந்தரர்

88. பிரித்து எழுதுக – நற்கறிகள்
(A) நான்கு + கறிகள் (B) நா + கறிகள்
(C) நன்மை + கறிகள் (D) நாள் + கறிகள்

89. களவு, பொய், காமம், கோபம் முதலிய குற்றம் காய்ந்தார்; வளமிகு மனையின் வாழ்க்கை நிலையினார். – இதில் குற்றம் காய்ந்தார் யார்?
(A) திருநாவுக்கரசர் (B) திருஞானசம்பந்தர்
(C) அப்பூதியடிகள் (D) மாணிக்கவாசகர்

90. தமிழர் திருநாள் தை முதல் நாளாம் அமிழ்தென இனிக்கும் பொங்கல் திருநாள் எனக் கூறியவர் யார்?
(A) அண்ணா (B) சுரதா
(C) பாரதிதாசன் (D) முடியரசன்

91. மு.வரதராதசனார் கடிதம் எழுதியது
(A) தம்பிக்கு (B) அன்னைக்கு
(C) தங்கைக்கு (D) மேற்கண்ட மூன்றும்

92. பாடல்கள் மூலமாகக் கடிதம் எழுதுவது
(A) பாட்டுக்கவி (B) சீட்டுக்கவி
(C) கடிதப் பாடல் (D) மடல்பா

93. காற்புள்ளி இடவேண்டிய இடங்கள் குறித்த கீழ்க்கண்ட கூற்றுகளில் தவறானது எது?
(A) பொருளை எண்ணும் நிலை
(B) மேற்கோள் குறிகளுக்கு முன்
(C) நூற்பகுதி எண் (D) விளி

94. ரஷ்ய அறிஞர் தால்சுதாய் எழுதிய 'உன்னுள் இருக்கும் ஆண்டவனின் அரசு' என்னும் நூலில் மொழிபெயர்த்து எழுதியிருந்த குறள் எது?
(A) ஒழுக்கம் விழுப்பம்.....
(B) இன்னா செய்தார்க்கும்.....
(C) நன்றிக்கு வித்தாகும்....
(D) அறனறிந்து மூத்த....

95. 'Persistence of Vision' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.
(A) பார்வைத்திறன் (B) பார்வை குறைபாடு
(C) பார்வை நிலைப்பு (D) பிடிவாத குணம்

96. 'Shooting' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.
(A) எய்தல் (B) படப்பிடிப்பு
(C) ஒளிச்சேர்க்கை (D) துப்பாக்கி சுடுதல்

97. ஆவுடையார்கோவிலை எழுப்பியவர் யார்?
(A) மாணிக்கவாசகர் (B) வீரமாமுனிவர்
(C) அகத்தியர் (D) அப்பர்

98. சமயக்குரவர்களின் எண்ணிக்கை
(A) 3 (B) 12 (C) 4 (D) 6

99. திருவாசகமும் திருக்கோவையாரும் இடம்பெற்றிருப்பது எந்தத் திருமுறையில்?
(A) 8 (B) 12 (C) 4 (D) 6

100. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின் ஏதம் படுபாக் கறிந்து – இதில் ஏதம் என்பதன் பொருள் யாது?
(A) குற்றம் (B) ஏமாற்றம்
(C) சிறப்பு (D) குற்றமின்மை

விடைகளுக்கான விளக்கம் :

10. மேதி – எருமை
11. (C) கம்பராமாயணத்தில் அயோத்தியா காண்டம் இரண்டாம் காண்டமாகும்
16. i) அழைத்து – முன்னிலை ஒருமை வினைமுற்று
iv) நிதி தருகவினை – வினைத்தொகை
24. (B) என்பதி – ஆறாம் வேற்றுமைத் தொகை
39. மிசை – மேல்
64. (D) வண்டு, களி, சம்பிரதம், மாதங்கி, காலம்
75. குன்றேறி – 7ம் வேற்றுமைத்தொகை

TT STUDY MATERIAL www.tnpsctamil.in

# TNPSC GR-2, GR-4, VAO பொதுத்தமிழ் மாதிரித்தேர்வு

## கவிஞர் நா. காமராசன்

கருப்பு மலர்கள் என்னும் கவிதைத் தொகுப்பின் மூலம் இலக்கிய உலகில் தன்னை புதுக்கவிஞனாக அறிமுகப்படுத்திக் கொண்டவர்

கிராமியச் சந்தங்களுடன் புதுப்பார்வை திகழப் படிமக் கவிதைகள் பலவற்றை எழுதியுள்ளார்.

இவர் ஓர் உருவகக் கவிஞர் ஆவார்.

“கவியரசு” என்ற பட்டம் பெற்ற காமராசன் அழகான கவிதைகளால் பொருத்தமற்ற கொள்கைகளைச் சாடுபவர். மேலும் இவர் சோசலிசக்கவிஞர், புதுக்கவிதையின் முன்னோடி, புதுக்கவிதை ஆசான் என்றும் அழைக்கபட்டார்.

**1942** ஆண்டு நவம்பர் மாதம் **29**ஆம் தேதி தேனி மாவட்டம் போடிநாயக்கனூருக்கு அருகிலுள்ள பி.மீனாட்சிபுரம் என்னும் கிராமத்தில் நாச்சிமுத்து – இலட்சுமி அம்மாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தவர்.

கவிஞரின் முதல் கவிதைத் தொகுதியான ‘கறுப்பு மலர்கள்’ தொகுதியை மதுரையில் நடந்த விழாவில் கலைஞர் வெளியிட்டார்.

சிறந்த இலக்கியப் படைப்புக்கான ஐக்கிய நாடுகள் சபையின் யுனெஸ்கோ விருதும் ‘கறுப்பு மலர்கள்’ தொகுதிக்குக் கிடைத்தது.

எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் ‘நீதிக்குத் தலை வணங்கு’ படத்துக்கு நீங்கள் பாடல் எழுத வேண்டும்’ என்று கேட்டுக்கொண்டார். இதையடுத்து “கனவுகளே ஆயிரம் கனவுகளே....” என்று தொடங்கும் பாடல் சூப்பர் ஹிட்டாகி கவிஞருக்கு நல்ல அறிமுகத்தை தேடித் தந்தது.

**படைப்புகள்:**

கறுப்பு மலர்கள், கிறுக்கல்கள், நாவல்பழம், மகாகாவியம், சுதந்திரதினத்தில் ஒரு கைதியின் டைரி, தாஜ்மகாலும் ரொட்டித்துண்டும், சூரியகாந்தி, சகாராவைத் தாண்டாத ஒட்டகங்கள், ஆப்பிள் கனவு, அந்த வேப்பமரம், காட்டுக்குறத்தி போன்ற முப்பத்து இரண்டு நூல்களை எழுதியுள்ளார்.

**பட்டங்கள்:**

உருவகக் கவிஞர், கவியரசு, சோசலிசக் கவிஞர், புதுக்கவிதை ஆசான் என்னும் பட்டங்களுக்குரியவர்.

**விருதுகள்:**

இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர், கதர் வாரியத் துணைத்தலைவர் என்று பல பொறுப்புக்களை வகித்த கவிஞர் தமிழக அரசின் கலைமாமணி விருது, சிறந்த பாடலாசிரியர் விருது, பாரதிதாசன் விருதையும் பெற்றுள்ளார்.

**பாராட்டு:**

“தன் கால்களில் இரத்தம் கசியக்கசிய பழைய முட்பாதைகளில் முன்னேறி முதலில் புதுக்கவிதை உலகுக்கு ஒரு புதுப்பாதை அமைத்தவன் காமராசன் தான் என்பதை மூர்ச்சை அடைந்தவன் கூட மறந்து விடக் கூடாது” என்று கவிஞர் வைரமுத்துவால் புகழப்பட்டவர்.

விலை மகளிர் குறித்த இவரது கவிதை அனைவராலும் பாராட்டப்பெறும் ஒன்றாகும்.

“பாற்கடல் அமுதத்தைதேவர்கள் சுவைத்து விட்டதால்தான் எங்கள் இதழ் அமுதத்தை அரக்கர்களுக்கு வழங்குகிறோம்.

எங்களுடைய நீதிமன்றத்தில்தான் ஒழுக்கம் தண்டிக்கப்படுகிறது.

நாங்கள் நிர்வாணத்தை விற்பனை செய்கிறோம் ஆடை வாங்குவதற்காக.”

இவரது கறுப்புமலர் புத்தகத்தில் திருநங்கைகள் பற்றி இவர் எழுதிய கவிதை பலரால் பாராட்டப்பெற்றது.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 A | 2 C | 3 A | 4 A | 5 C | 6 B | 7 B | 8 B | 9 B | 10 A |
| 11 C | 12 C | 13 D | 14 D | 15 A | 16 D | 17 A | 18 B | 19 A | 20 C |
| 21 B | 22 A | 23 C | 24 B | 25 C | 26 D | 27 D | 28 C | 29 C | 30 A |
| 31 A | 32 D | 33 B | 34 B | 35 D | 36 B | 37 D | 38 D | 39 B | 40 B |
| 41 B | 42 A | 43 C | 44 A | 45 B | 46 A | 47 A | 48 A | 49 D | 50 C |
| 51 B | 52 A | 53 C | 54 C | 55 A | 56 D | 57 C | 58 B | 59 A | 60 C |
| 61 A | 62 D | 63 C | 64 D | 65 A | 66 A | 67 C | 68 C | 69 B | 70 A |
| 71 B | 72 B | 73 B | 74 B | 75 A | 76 B | 77 B | 78 A | 79 B | 80 C |
| 81 B | 82 B | 83 C | 84 A | 85 B | 86 D | 87 B | 88 C | 89 C | 90 D |
| 91 D | 92 B | 93 C | 94 B | 95 C | 96 B | 97 A | 98 C | 99 A | 100 A |